**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் புரட்டாசி திங்கள் 24–ம் நாள்
2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**இடைமனு எண். 3/2025–ல் – அசல் வழக்கு எண். 400/2018**

அய்யம்மாள் .....மனுதாரர்/வாதி

**...எதிராக...**

1. வெ.தெட்சிணாமூர்த்தி
2. D.கலாவதி,
3. சார்பதிவாளர், சீர்காழி
4. தமிழ்நாடு அரசு சார்பாக
அதன் மாவட்ட ஆட்சியர்,
நாகப்பட்டினம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 24.09.2025அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B.ரெங்கராஜு அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர் /வாதி தரப்பில் விடுபட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர்/வாதியை முதன்மை விசாரணைக்கு மீண்டும் அழைக்க (Recall செய்ய) வேண்டி இம்மனு உ.வி.மு.ச கட்டளை–18, விதி–17ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.10 16:16:54 +0530

**1. மனுவின் சுருக்கம்.**

(i) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி, பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரனை முடிவுற்று பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக அழைத்தும் பிரதிவாதிகள் ஆஜரின்மையால் Defendants side close செய்யப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் வாதுரைக்காக கடந்த 06-08-2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது.

(ii) இந்நிலையில் வழக்கில் I.A.No.1513/2018-யில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அசல் வழக்கில் வாதியின் முதன்மை விசாரணையின் போது குறியீடு செய்ய விடுபட்டுவிட்டது. மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யபடாத பட்சத்தில் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும். மனுதாரர்/வாதி வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஆவணங்களை குறியீடு செய்யாமல் இருக்கவில்லை. மேற்படி ஆவணங்கள் மனுதாரர்/வாதி தரப்பில் முக்கிய ஆவணங்களாகும். எனவே மனுதாரர்/வாதி தரப்பில் விடுபட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர்/வாதியை முதன்மை விசாரணைக்கு மீண்டும் அழைக்க (Recall செய்ய) வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2.** 1 மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 24.09.2025 அன்று இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 3 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 12.09.2025 அன்று எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.10 16:17:01 +0530

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரனை முடிவுற்று பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக அழைத்தும் பிரதிவாதிகள் ஆஜரின்மையால் Defendants side close செய்யப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் வாதுரைக்காக கடந்த 06-08-2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் அசல் வழக்கில் வாதியின் முதன்மை விசாரணையின் போது சில ஆவணங்கள் குறியீடு செய்ய விடுபட்டுவிட்டது என்றும், எனவே மனுதாரர் /வாதி தரப்பில் விடுபட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர்/வாதியை முதன்மை விசாரணைக்கு மீண்டும் அழைக்க (Recall செய்ய) வேண்டி இம்மனு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 1 மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்றும், 3 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என்றும் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.10 16:17:07 +0530

உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.10 16:17:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | - இல்லை - |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.10 16:17:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.3/2025-ல்
அசல் வழக்கு எண்.400/2018
நாள்.10.10.2025.